**HMOP .No. 47/2020**

**Date : 12.01.2023**

**ம.சா.2 சுப்பிரமணியன்**

**எ.த.கு.வி**

நான் சுப்புலாபுரத்தில் 4, 5 ஆண்டுகளாக காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. மனுதார் அழைத்ததின் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். முதல் விசாரணையில் உள்ள விவரங்களை மனுதார் காய்கறி வாங்க வரும்பொழுது என்னிடம் கூறினார். மனுதார் எனக்கு உறவினர் கிடையாது. மனுதாருக்கும் எதிர்மனுதாருக்கும் 4 ஆண்டுகளுக்கு முன்னர் திருமணம் நடைபெற்றது. தேதி, மாதம், திருமணம் நடைபெற்ற இடம் தெரியாது. இருவருக்கும் காதல் திருமணம் தான் நடைபெற்றது என்றால் சரிதான். இருவரும் 1 ஆண்டுகளாக காதலித்து திருமணம் செய்தனர் என்றால் சரிதான். எதிர்மனுதாரை சிறுவயது முதல் எனக்கு தெரியும். நான் காய்கறி வியாபாரம் செய்த சமயம் எதிர்மனுதார் மது அருந்திவிட்டு 3, 4 முறை மனுதாரிடம் சண்டையிட்டதை நான் பார்த்தேன். திருமணத்திற்கு முன்னரும் எதிர்மனுதாருக்கு மது மற்றும் புகைப்பழக்கம் இருந்தது. இருவரின் திருமணத்திற்கு மனுதாரின் பெற்றோர் செல்லவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது, அவர்கள் திருமணத்திற்கு நான் செல்லவில்லை. எனக்கு மது குடிக்கும் பழக்கம் உள்ளது என்றால் சரிதான். நான் மதுபோதையில் எதிர்மனுதாரின் நண்பர் வீட்டில் தகராறு செய்த பொழுது எதிர்மனுதார் தட்டி கேட்டதால் எனக்கும் எதிர்மனுதாருக்கும் விரோதம் ஏற்பட்டு அதன் காரணமாக எதிர்மனுதாருக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூறுவது போல் எதிர்மனுதார் குடித்துவிட்டு சண்டை எதுவும் செய்யவில்லை என்றாலும், அதை நான் கண்டிக்கவில்லை என்றாலும் சரியல்ல. என்னுடைய வீட்டில் இருந்து எதிர்மனுதாரின் வீடு 1 கிமீ இருக்கும் என்றால் சரியல்ல. அடுத்த தெரு தான். இருவருக்கும் இடையே வீட்டிற்குள்ள என்ன பிரச்சனை என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். 2019ம் ஆண்டு சரஸ்வதி பூஜை சமயம் நான் ஊரில் தான் இருந்தேன். 2019ம் ஆண்டு சரஸ்வதி பூஜை சமயம் இருவரும் சண்டையிட்ட பொழுது நான் கூட இல்லை.

எதிர்மனுதார் தாக்கியதில் மனுதாருக்கு கை ஒடிந்ததாக கட்டு போட்டு இருந்தார். மனுதாரை நான் மருத்துவமனைக்கு எங்கும் சென்று பார்க்கவில்லை. மனுதார் வீட்டில் வைத்து நான் சுகம் விசாரித்தேன். நான் கூறுவது போல் யாதொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் மனுதாருக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரை எனக்கு பிடிக்காது என்பதால் அவருக்கு விரோதமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே என்னுடைய சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல.

**ம.வி இல்லை.**